மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
மூன்றாம் தவணை - 2026

கிறிஸ்தவம் Christianity	Three Hours Gr -12	43	T	I,II

கவனிக்க

(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(2) 1 தொடக்கம் 20 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(3) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி (X) இடுக.

பகுதி I

1) குலமுதுவர்களில் ஒருவரும் ஐந்நூல் ஆசிரியருமானவர்

1. ஆபிரகாம் 2. மோசே 3. ஈசாக் 4. யாக்கோபு 5. யோசப்பு

2) இறைவாக்கினர் எலியா மற்றும் பால் வழிபாட்டுச் சம்பவம் இடம்பெற்ற சமவெளி

1. செப்பலோ சமவெளி 2. பெலிஸ்திய சமவெளி 3. எஸ்திரலோன் சமவெளி
4. ஆக்கோ சமவெளி 5. சாரோன் சமவெளி

3) புதிய ஏற்பாடு எழுதப்பட்ட மொழி

1. கிரேக்கம் 2. அரமேயம் 3. ஆங்கிலம் 4. எபிரேயம் 5. இலத்தீன்

4) சமாரியர் தமக்கென கோவில் கட்டிய இடம்

1. யூதா 2. கெரிசிம் 3. ஒலிவமலை 4. செக்கேம் 5. பெத்தேல்

5) திருத்தூதர் யோவானால் எழுதப்பட்ட நூல் எவ்வாறு அழைக்கப்படுகிறது.

1. யோவானின் சிந்தனை 2. யோவானின் போதனை 3. யோவானின் உடல்
4. யோவானின் இருப்பிடம் 5. யோவானின் மையம்

6) எஸ்ரா என்பவர்

1. குருவும் இறவாக்கினரும் 2. வைத்தியரும், எழுத்தாளரும்
3. குலமுதுவரும் இறைவாக்கினரும் 4. சட்டவல்லுனரும் குருவும்
5. அரசரும் விடுதலை வீரரும்

7) சீனாய்க்கு 'ஒரேபு' எனும் பெயரையும் மோசேயின் மாமனாருக்கு இத்திரோ எனும் பெயரையும் அறிமுகம் செய்யும் மரபு

1. ஏலோகிம் மரபு 2. யாவே மரபு 3. குருக்கள் மரபு
4. இணைச்சட்ட மரபு 5. யாவே, ஏலோகிம் மரபு

Past Papers Wiki

8) மாசா, மெரிபா எனும் எபிரேயச் சொல்லின் பொருள்

1. இறைவனுக்கு செவிகொடுத்தல்
2. கட்டளை நிறைவேற்றல்
3. வாதாடுதல், அன்பு செய்தல்
4. வெளியேறுதல், சோதித்தல்
5. சோதித்தல், வாதாடுதல்

9) திருமண உறவை இறைவனுக்கும், இறைமக்களுக்கும் இடையில் உள்ள உறவாக முன்வைக்கும் இறைவாக்கினர்

1. எசாயா 2. மீக்கா 3. எரேமியா 4. ஒசேயா 5. ஆமோஸ்

10) தாயின் கருவில் உருவாகு முன்னே தெரிவு செய்யப்பட்ட இறைவாக்கினர்

1. ஒசேயா 2. ஆமோஸ் 3. ஏசாயா 4. எரேமியா 5. எசேக்கியேல்

11) ஞான இலக்கியங்களில் பொருந்தாத நூல்களில் ஒன்று

1. யோபு
2. சபை உரையாளர்
3. சீராக்கின் ஞானம்
4. திருப்பாடல்
5. தொடக்கநூல்

12) 'பரிசேயர்' என்பதன் பொருள்

1. பிரிந்து இருப்பவர்
2. சேர்ந்து நடப்பவர்
3. தூய்மை உடையவர்
4. வழி நடத்துபவர்
5. தலைமை வகிப்பவர்

13) எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர் இருவர்

1. நாகூம், குல்தா
2. ஆபகூக், அகியா
3. மலாக்கி, ஆகாய்
4. எரேமியா, அகியா
5. ஆபகூக், ஒசேயா

14) 'இயேசுவின் அன்புச் சீடன்' என விழிக்கும் நூல் ஆசிரியர்

1. லூக்கா 2. யாக்கோபு 3. மாற்கு 4. யோவான் 5. மத்தேயு

❖ 15 – 17 வரையான வினாக்களுக்கு கீழ்வரும் தரவுகளை பயன்படுத்துக.

A - ஞானியர் வருகை

B - தண்ணீர் திராட்சை இரசமாக மாறுதல், பெத்சதாவில் உடல் நலமற்றவர் நலமடைதல்

C - புகழ்ச்சிப்பாடல்

D - ஐயாயிரம் பேருக்கு உணவு வழங்குதல், கடல் மீது நடத்தல்

E - இலாசர் உயர் பெறல், பிறவியில் பார்வை அற்றவர் பார்வை பெறுதல்

15) சமநோக்கு மற்றும் யோவான் நற்செய்தியில் குறிப்பிடப்படும் புதுமைகளை குறிப்பிடும் எழுத்து

1. A, B 2. D 3. E 4. C,D 5. A, B, C

16) யோவான் நற்செய்தியில் மட்டும் வெளிப்படும் புதுமைகளை குறிப்பிடும் எழுத்துக்கள்

1. B, E 2. A, C, 3. B, C, 4. D, 5. A, B, C

17) மத்தேயு நற்செய்தியில் மட்டும் குறிப்பிடப்படும் நிகழ்வும் லூக்காவில் மட்டும் இடம் பெறும் சம்பவத்தை உள்ளக்கிய எழுத்துக்கள்

1. A, B, 2. A, D 3. B, C 4. D, B 5. A, C

18) புதிய ஏற்பாட்டில் மீட்பு வரலாற்றை வெளிப்படுத்தும் நூல்

1. திருவெளிப்பாடு 2. உரோமர் 3. கலாத்தியர் 4. பிலிப்பியர் 5. திருத்தூதர்பணி

Past Papers Wiki

19) உலகையும் அதில் உள்ள அனைத்தையும் படைத்த இறைவன் விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவராக இருக்கின்றார் என்றும், 'அறியாத தெய்வத்திற்கு' என எழுப்பட்டிருந்த பலிப்பீடம் பற்றியும் பவுல் விவாதித்தது.

1. இக்கோனியா 2. செசாரியா 3. தெசலோனிக்கா 4. எதேன்ஸ் 5. எபேசு

20) முதன்முறையாக 'கிறிஸ்தவர்கள்' என அழைக்கப்பட்ட இடம் யாது?

1. லிஸ்திரா 2. பாப்போ 3. செலுக்கியா 4. சாலமி 5. சிரிய அந்தியோக்கியா

(1x20=20 புள்ளிகள்)

பகுதி II

❖ **பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிந்தெடுத்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

பகுதி I

01)

1. பாலஸ்தீன தேசத்தின் சிறப்புப் பெயர்கள் 2 தருக.
2. செழும்பிறைப் பகுதியினுள்ளே அடங்கியுள்ள பழமையான நாகரீகங்கள் 2 ஐ குறிப்பிடுக.
3. சாலமோன் அரசர் காலத்தில் மக்கள் விரக்தியடைந்தமைக்கான காரணங்கள் மூன்றினை தருக?
4. கி.மு 444ல் பபிலோனியாவிலிருந்து எருசலேம் வந்தடைந்த யூத குழுவினர் மத்தியில் நெகேமியாவால் ஆற்றப்பட்ட பணிகள் நான்கினை குறிப்பிடுக.

(2+4+6+8=20 புள்ளிகள்)

02) 1. ஐந்நூலுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் இரண்டு தருக?

2. யாவே மரபுக்கு ஊடாக வெளிப்படும் மறையுண்மைகள் இரண்டு தருக.
3. மனிதன், இறைவனுக்கெதிராக பாவம் செய்தாலும் இறைவன் மானிடரை கைவிடுவதில்லை என்பதற்கு ஆதாரங்கள் மூன்றினை குறிப்பிடுக.
4. பாபேல் கோபுர சம்பவத்தின் வழியாக பெற்றுக்கொள்ளும் படிப்பினை நான்கினை குறிப்பிடுக.

(2+4+6+8=20 புள்ளிகள்)

03) 1. பத்துப்பெரும் துன்பங்களில் முதல் இரண்டினை தருக?

2. பாஸ்கா சடங்கில் அடங்கியுள்ள இரண்டு அம்சங்கள் தருக?
3. 'செங்கடல் கடத்தல்' தொடர்பாக யாவே மற்றும் குருக்கள் பாரம்பரியங்களின் கருத்துக்கள் இரண்டினை முன்வைக்குக.
4. பாலை நிலத்தில் இஸ்ரயேலருக்கு கிடைத்த இறைபராமரிப்பு நான்கினை குறிப்பிட்டு விளக்குக.

(2+4+6+8=20 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

பகுதி II

04)

1. இறைவாக்கினர் ஏரேமியா முன்வைத்த 'புதிய உடன்படிக்கை வாழ்வு'பற்றி ஐந்து விடயத்தினை முன் வைத்து விளக்குக.
2. இறைவாக்கினர்களின் போதனையை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவ மாணவர் தமது அன்றாட வாழ்க்கையில் நல்மனப்பாங்கு மற்றும் சமூக பொறுப்பை எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என்பதை விளக்குக.

(10+10=20 புள்ளிகள்)

05)

1. மத்தேயு நற்செய்தியில் இயேசு வழங்கிய முக்கிய போதனைகள் ஐந்தினை முன்வைக்குக.
2. இயேசுவின் சிறுபராயத்தை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவ மாணவர் என்ற ரீதியில் நீர் எவ்வாறு துலங்குவீர் என்பதை விளக்குக.

(10+10=20 புள்ளிகள்)

06)

1. புனித பவுலின் மறைத்தூதுப்பணிக்கு எதிரான சவால்கள் ஐந்தினை குறிப்பிடுக.
2. மறைதூதுப்பணிக்கு இறை நம்பிக்கையுடன் கூடிய தைரியம், ஞானம் அவசியம் என்பதை புனித பவுலின் பணியின் எடுத்துக்காட்டுகள் ஊடாக விளக்குக.

(10+10=20 புள்ளிகள்)

07)

1. பாலஸ்தீனத்தில் வாழ்ந்த சமயக்குழுக்கள் ஐந்தினை குறிப்பிட்டு, பரிசேயர் பற்றி ஐந்து பண்புகள் தருக?
2. இன்றைய கிறிஸ்தவ வாழ்க்கையில் வெளிச்சடங்கு பக்தியைவிட உள்ளார்ந்த ஆன்மீக தூய்மையை வளர்ப்பது ஏன் முக்கியம் என்பதை விளக்குக.

(10+10=20 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library